## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்திக் (தனியார்) கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து

செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள்

| இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கற்பனைச் சொத்துக்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 38 இன் 104 ஆம் பந்தியின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்துடன் கற்பனைச் சொத்துக்களின் காலக்கழிவு, காலப் பகுதி மற்றும் முறைமை ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியின் போதும் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்படாமையினால் கிரயம் ரூபா 2 மில்லியன் ஆன முழுமையாக பெறுமானத் தேய்வு செய்து முடிவடைந்திருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற கற்பனைச் சொத்துக்கள் 2020 ஆம் ஆண்டு முதல் அந்த சொத்துக்களின் நியாயமான பெறுமதி பூச்சியமாக நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | கற்பனைச் சொத்துக்கள் தொடர்பாக நியமத்தின் பிரகாரம் மீளாய்வு செய்து அந்த சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து 2025 ஆம் ஆண்டின் நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கற்பனைச் சொத்துக்களின் காலக் கழிவு, காலப் பகுதி மற்றும் முறைமை தொடர்பாக ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியின் போதும் மீளாய்வு செய்து சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 23 இன் பிரகாரம் செயற்பாட்டு வருமானத்தின் அடிப்படையில் வருடாந்த வரிப் பொறுப்புக்கள் ரூபா 104.98 மில்லியன் ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வின் போது மேற்கொள்ளப் பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் அந்த பொறுப்புக்கள் ரூபா 106.46 மில்லியன் ஆக இருந்தமையால் விரிவான வருமானக் கூற்றில் வருடாந்த வரிச் செலவினம் ரூபா 1.48 மில்லியனால் குறைத்துக் காண்பிக்கப் பட்டிருந்தது. | வருமான வரி கணிப்பிடல் 2025 பெப்ரவரி 15 ஆம் திகதியில் உள்ளவாறு கொடுப்பனவை மேற்கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட வருமான வரி பொறுப்பிற்காக கணிப்பிடப்பட்டிருந்தது. எனினும் ஏனைய கணக்காய்வு கணக்கின் பிரகாரம் செலுத்த வேண்டிய வருமானவரிப் பொறுப்புக்கள் 2025 செப்டெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்படுவதுடன் அதன் பிரகாரம் குறைவான வரி ஒதுக்கீட்டிற்குரிய செலவினம் 2025 ஆம் ஆண்டின் போது கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருமான வரிப் பொறுப்புக்கள் சரியாக கணக்கீடு செய்வதற்கும், செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் | நேரொத்த அறிக்கையின் | வேறுபாடு | முகாமைத்துவத்தின் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|

| | | பிரகாரம் பெறுமதி<br>ரூபா மில்லியன் | பிரகாரம் பெறுமதி<br>ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | கருத்துரை | |
|---|---|---|---|---|---|---|
| (அ) | திறைசேரி உண்டியலின் அடிப்படையில் வட்டி வருமானம் | 19.446 | 18.982 | 0.464 | இந்த வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து 2025 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. | இணக்கமின் மைகளுக்கான காரணங்களைக் வெளிப்படுத்தி தேவையான சரிசெய்தல்கள் தாமதமின்றி மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (ஆ) | வாடகை கடன் பட்டோர் | 163.76 | 166.51 | 2.75 | இந்த இணங்காமைகள் கணக்கீட்டு முறைமையில் நாட்குறிப்பின் மூலம் பேரேட்டில் உள்ளடக்கப் படுகின்ற கொடுக்கல் வாங்கல்களின் கடன் பட்டோர் பட்டோலையை இணக்கம் செய்யும் போது முறைமையில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாமையால் ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பட்டோலைகளை சரிசெய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்படுகின்றது. | இணக்கமின் மைகளுக்கான காரணங்களைக் வெளிப்படுத்தி தேவையான சரிசெய்தல்கள் தாமதமின்றி மேற்கொள்ளப் படல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை ரூபா மில்லியன் | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| செலுத்த வேண்டிய ஏனைய அட்டுறு செலவினம் | 7.14 | பட்டோலை, மூல ஆவணங்கள் மற்றும் காலப்பகுப்பாய்வு | அட்டுறு செலவினம் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று தயாரிக்கப்படுவதுடன் அந்த கணக்குகளில் மேற்கொள்ள வேண்டிய மிகை மற்றும் பற்றாக்குறை ஒதுக்கீடுகள் சரிசெய்ய வேண்டி உள்ளது. உரிய | அட்டுறு செலவினம் தொடர்பான பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு கணக்காய்விற்கு |

| | | |
|---|---|---|
| | சரிசெய்தல்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் உரிய பட்டோலைகள் தயாரித்து எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்த வேண்டிய பட்டியல் மற்றும் செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் பணப் பட்டியல்களின் பெறுமதி முறையே ரூபா 0.6 மில்லியன் மற்றும் ரூபா 1.9 மில்லியன் ஆக இருந்ததுடன் அந்த பெறுமதிகளை தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 05 வருடங்களுக்கு மேற்பட்ட ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய பட்டியல் மற்றும் செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் பட்டியல்களின் பெறுமதிகளுக்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உரிய அங்கீகாரம் கிடைத்த பின்னர் 2025 இன் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய பெறுமதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத் தப்பட்ட செயற்பாட்டு கைநூலின் 5.3 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் போது கம்பனியால் ரூபா 1,308 மில்லியன் வரிக்குப் பின் இலாபம் உழைக்கப்பட்டிருந்த போதிலும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இணங்கும் வகையில் வரிக்குப் பின் இலாபத்தில் ஆகக்குறைந்தது 30 சதவீதம் இலாபப்பங்கு உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 இன் கணக்காண் டின் போது கம்பனி உழைக்கின்ற இலாபத்தின் அடிப்படையில் உரிய இலாபப் பங்கை செலுத்துவதற்கு தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய சுற்றறிக்கை மற்றும் கம்பனிகள் சட்டத்திற்கு இணங்க இலாபப் பங்கை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,418,904,742 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 2,105,068,141 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 686,163,399 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு முதலீடு செய்யப்பட்ட ஆதனங்களின் மீள் மதிப்பீட்டில் கிடைத்த இலாபம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 869,300,000 இனால் வீழ்ச்சியடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்தி கம்பனியின் அகவிதியின் பிரகாரம் கம்பனியின் ஆரம்ப நோக்கம் எந்தவொரு பிரதேசத்திலும், எந்தவொரு அபிவிருத்தி செயற்திட்டத்திலும் திட்டமொன்றின் அபிவிருத்தி, கட்டியெழுப்புதல் மற்றும் அமுல்படுத்த வேண்டியிருந்த போதிலும் கம்பனி ஸ்தாபிக்கப்பட்ட 2006 ஆகஸ்ட் 03 ஆம் திகதி முதல் இதுவரை அதாவது 19 வருடங்களுக்கு அண்மித்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஒரேயொரு அபிவிருத்தி நடவடிக்கை செத்சிறிபாவில் 13 மாவடிகளை உடைய கட்டிட அபிவிருத்தி, கட்டியெழுப்புதல் மற்றும் அமுல்படுத்தியிருந்தமையும் கம்பனியின் 2021-2024 காலப் பகுதியில் உரிய கூட்டிணைந்த திட்டத்தில் ஏனைய விரிவான அபிவிருத்தி செயற்பாடுகள் உள்ளடக்கப்படாதிருந்தமையும் கம்பனியின் அகவிதியின் பிரகாரம் அடிப்படை நோக்கங்கள் நிறைவேற்றுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் விரிவான நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்வரும் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கம்பனியின் அகவிதியின் பிரகாரம் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 4.96 மில்லியன் பெறுமதியான கம்பனிக்குச் சொந்தமான டெக்டெர் மற்றும் 04 டேலர்கள் சட்ட ரீதியாக கையளிக்கப்படாமல் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கடமைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | அந்த சொத்துக்கள் எமது தாய்க் கம்பனியான நகர அபிவிருத்தி அதிகார சபையின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்த போதும் அந்த சொத்துக்களின் சட்ட ரீதியான உரிமைத் தன்மை கம்பனிக்குச் சொந்தமாகக் காணப்படுகின்றமையால் அந்த சொத்துக்கள் மோட்டார் வாகன வகைப்படுத்தலின் கீழ் நடைமுறையல்லா சொத்துக்களாக | கம்பனிக்குச் சொந்தமான சொத்துக்களை சட்டரீதியாக கையளிக்காமல் ஏனைய நிறுவனத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாட்டு கைநூலின் 3.2.(i) மற்றும் 3.4 ஆம் பந்திகளின் பிரகாரம் கம்பனிக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அங்கீகாரிக்கப்பட்ட பதவியணியினர் அல்லது பதவியணியினர் பதிலீட்டு திட்டமொன்று காணப்படவில்லை. கம்பனியின் பதவியணியினரின் நிரந்தர உத்தியோகத்தர்கள் 03 பேர்களும், நகர அபிவிருத்தி அதிகார சபையில் நியமிக்கப்பட்ட 07 உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய இருந்தது. அவ்வாறே கம்பனியின் கடமை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் 57 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1.06 மில்லியன் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க சேர்க்கப்பட்டுள்ளதுடன் கம்பனியின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடனும் பெறப்பட்டிருந்தது. அவ்வாறே வரையறுக்கப்பட்ட பதவியணியினரின் மூலம் உரிய செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றமையால் அதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரிவுகளில் பதவியணியினரின் சேவை பெறப்பட்டுள்ளதுடன் அதற்காக இந்த படிகள் செலுத்தப்பட்டுள்ளது. | கம்பனிக்கான ஆட்சேர்த்தல் நடைமுறை, பதவி யணியினர் எண்ணிக்கை மற்றும் பதவியணியினர் பதிலீட்டு திட்டமொன்று தயாரித்து தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப் படுத்தப்பட்ட செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பந்திகளின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குகள் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை உள்ளடக்கி வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இந்த ஸ்தாபிக்கப்பட்ட 2006 ஆம் ஆண்டு முதல் வருடாந்த அறிக்கை | வருடாந்த அறிக்கை 2023 ஆம் ஆண்டில் தயாரித்து பணிப்பாளர் சபை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போதும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் திருத்தங்களை மேற்கொண்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருடாந்த அறிக்கை தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் பாராளுமன்றதில் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கூட்டிணைந்த திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட நிறுவன நல்லாளுகை தொடர்பான வழிகாட்டியின் 2.3 ஆம் பந்திகளின் பிரகாரம் கம்பனியின் கூட்டிணைந்த திட்டம், மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைக் திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு வரிகை அமைச்சின் செயலாளரின் மூலம் பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் தேசிய வரவு செலவுத்திட்ட பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனியில் அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2025-2028 கூட்டிணைந்த திட்டத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் இனங்கண்டு தேவைவான நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கும் அந்த அறிக்கைகளை பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 2025 ஆம் ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டம் எதிர்வரும் ஆண்டின் போது தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் 2025 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை செயலாளரின் மூலம் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கம்பனியின் கூட்டிணைந்த திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு கால ரீதியில் தயாரித்து தேவையான அங்காரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |